# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி - 06 | 20-03-2003 | வியாழக்கிழமை | ஓசை 30



நகைகளுக்கு தனித்துவம் பெற்ற நிறுவனம்

கணேசர் நகையகம்

கொழும்பு, [illegible], யாழ்ப்பாணம்

T.P: 024-22464 (சி-7653)

பஜார் வீதி, வவுனியா.


## மூழ்கடிக்கப்பட்ட புலிகளின் வணிகக் கப்பலில் வீரச்சாவடைந்த பதினொரு பேரின் விபரம்

கடந்த 10ஆம் திகதி சர்வதேசக் கடற்பரப்பில் சிறிலங்காவின் கடற்படையினர் விடுதலைப் புலிகளின் வணிகக்கப்பலைத் தாக்கியழித்தபோது வீரச்சாவடைந்தோர் விபரம் வருமாறு:

01) கப்பல் கப்டன் சிலம்பரசன் றஞ்சன்
வேலாயுதபிள்ளை ஜெயறஞ்சன்
நி.மு. பாடசாலைவீதி, ஆழியவளை வடமராட்சி கிழக்கு, யாழ்.
த.மு. அம்பலவன் பொக்கணை, புதுக்குடியிருப்பு.

02) 2nd ஒவிசர். சுடர்ணன்
கருணானந்தம் சர்வானந்தம்
நி.மு. கள்ளப்பாடு முல்லைத்தீவு.
த.மு.பாளையடி முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு.

03) சீவ் எஞ்சினியர் அம்பிகைவாணன்
தவராசா புலேந்திரன்
மூளாய், யாழ்ப்பாணம்.

04) ஏபிள்சீமன் எழில்கண்ணன்
அருட்சீலன் துருசுலாத்.
நி.மு. நீர்வேலி, யாழ்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## - இறுதித்தீர்வு கிட்டும்வரை - யாழ். குடாநாட்டில் படைமுகாம் எவையுமே குறைக்கப்படாது

### அமைச்சர் மிலிந்த மொறகொட

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு இறுதி அரசியல்தீர்வு கிட்டும்வரை யாழ்ப்பாணத்திலுள்ள படைமுகாங்களையோ படையினரையோ குறைக்கப் போவதில்லை என அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் அரசு - புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தை நேற்று இரண்டாவது நாளில் இணைந்து கொண்டபோது அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து இந்திய இராணுவ அதி

(08ஆம் பக்கம் பார்க்க)

## - சிறிலங்கா அரசு - புலிகள் இடையிலான பேச்சுவார்த்தையில் -

# ஜப்பான் விசேட தூதுவர் பங்கேற்றது சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்

### அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்

(டோக்கியோ)

**ஜப்பானில் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறுவதும், ஜப்பானிய தூதுவர் கலந்து கொண்டதும் ஒரு சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த முக்கியமான நிகழ்வாகவே நாம் கருதுகின்றோம். ஏனெனில், இவரது பிரசன்னமானது இப்பேச்சு வார்த்தைக்கு சர்வதேச பரிமாணத்தைக் கொடுத்துள்ளது என விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியரு மான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் நேற்றைய பேச்சுவார்த்தையின் பின் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.**

மேலும் அவர் தெரிவிக்கையில்; ஜப்பானில் நடைபெறும் இந்த சமாதானப் பேச்சுவார்த்தையில் ஜப்பானிய தூதுவர் ஒருவர் விடுதலைப் புலிகளுடனும் சிறிலங்கா அரச தரப்புப் பிரதிநிதிகளுடனும் சேர்ந்து "சிரான்" உபகுழு சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றி கலந்துரையாடினார். இவர் ஏற்கனவே "சிரான்" உபகுழுவில் ஒரு ஆலோசகராக இருக்கிறார். கிளிநொச்சியில் நடைபெற்ற இரண்டு கலந்துரையாடல்களில் ஏற்கனவே கலந்துகொண்டு தமது ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

ஜப்பானில் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறுவதும், ஜப்பானிய தூதுவர் கலந்து

(08ஆம் பக்கம் பார்க்க)





## மனித உரிமை விவகாரத்திற்கு உஆம் நாள் பேச்சில் முக்கிய இடம்

விடுதலைப்புலிகளுக்கும் - சிறிலங்கா அரசிற்கும் இடையில் யப்பானில் நடைபெறும் ஆறாம் சுற்றுப் பேச்சுவார்த்தையின் இரண்டாம் நாளில் மனித உரிமைகள் விடயங்கள் முக்கியமாக கலந்துரையாடப்பட்டன.

இது பற்றி புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் அவர்கள் தெரிவிக்கையில்,

சர்வதேச புகழ்பெற்ற மனித உரிமை செயற்பாட்டாளரான திரு. இயன்மாட்டின் அவர்கள் இன்று மாலை இரண்டாவது அமர்வுப் பேச்சில் கலந்துகொண்டு ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதாவது இருதரப்பினரும் மனித உரிமைகளைப் பேணுவது சம்பந்தமாக கையாள வேண்டிய சில விடயங்கள் பற்றி அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது பற்றி நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது. குறிப்பாக தமிழர் தரப்பில் மனித உரிமைகள் என்று சொன்னால் பயங்கரவாத தடைச்சட்டம், இதனால் எழுந்துள்ள நிலைமை, தமிழ்க் கைதிகளின் பரிதாப நிலைமை, சிறுவர்களின் பிரச்சினை, பெண்

(08ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வுத்துறையைச் சேர்ந்தவர் கல்கிசையில் சுட்டுக்கொலை

(லண்டன்)

சிறிலங்கா இராணுவ புலனாய்வுத்துறையைச் சேர்ந்த கதிர்காமர் ரகுபதி (வயது 39) என்பவர் நேற்று முன்தினம் இரவு கொழும்பு கல்கிசையில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மாலை 7.30 மணியளவில் கல்கிசை பீரிஸ் வீதியால் சென்றுகொண்டிருக்கையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கைத்துப்பாக்கியினால் சுட்டுவிட்டுத்தப்பிச் சென்றுள்ளனர்.

முன்னாள் தமிழ் போராளிக்குழு ஒன்றின் உறுப்பினராக இருந்து வந்த இவர் 1990 இன் பிற்பகுதியிலிருந்து இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் சேர்ந்து இயங்கிவந்ததாக நம்பப்படுகிறது. கல்கிசைப் பொலிசார் துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களைத் தேடி விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## சிரானின் செயற்பாடுகள் நத்தை வேகத்தில் நகர்கின்றது!

### தமிழ்ச்செல்வன் ஜப்பானில் கவலை

. 'சிரான்' குழுவின் செயற்பாடுகள் நத்தை வேகத்தில் நகர்வதாக 'சிரான்' உபகுழுவின் தலைவரும், தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளருமான சு.ப.தமிழ்ச்செல்வன் குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் நேற்று ஜப்பானில் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

நீண்டகாலமாக மாதாமாதம் கூடி பேசிவருகிறோம். தீர்மானங்களை எடுக்கிறோம். ஆனால் உருப் படியாக ஒன்றும் நடக்கவில்லை.

இடம்பெயர்ந்த மக்கள் தத்தமது வீடுகளுக்குத் திரும்ப வேண்டும். இது முக்கியமான பிரச்சினை. இது இன்னும் நடைபெறவில்லை. பல்லாயிரக்கணக்கான மக்கள் எமது முடிவைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உபகுழுவை அமைத்து ஒன்றும் செயற்படுமாப் போலில்லை.

மேலும், புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில்

(08ஆம் பக்கம் பார்க்க)

### உருவப்படங்கள் இணைப்பு

10.03.2003 அன்று சர்வதேசக் கடற்பரப்பில் வீரகாவியமான மாவீரர்களின் திருவுருவப் படங்கள் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளன.

## வரி விளம்பரம்

### உயர்கல்வி வாய்ப்பு

கனடா நாட்டின் ரொறொன்ரோ நகரில் கம்பியூட்டர், முகாமைத்துவம் என்பவற்றில் உயர் கல்விக்கான வாய்ப்புக்கள். A/L இல் சித்தி போதுமானது. விபரங்களுக்கு: 140, பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொலை.பே.இல. 2222478.

## அதிசய பசுக்கன்று

பூநகரி ஆலங்கேணிப் பகுதியில் பசுமாடு வாலில்லாத பசுக் கன்றொன்றை ஈன்றுள்ளது.

செல்வரெத்தினம் அகிலன் என்பவருக்குச் சொந்தமான இப் பசுவின் வாலில்லாத கன்றை மக்கள் தினமும் பார்வையிட்டுவருகின்றனர்.

# சாந்தன் குடியிருப்பு புதுமனைகள் குடியிருப்பாளரிடம் கையளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

இரணைமடு சாந்தபுரம் சாந்தன் குடியிருப்பில் புதுமனைகள் கையளிப்பு நிகழ்வு நேற்று பி.ப 3.45 மணிக்கு ஊரக வளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் அன்பரசன் தலைமையில் நடைபெற்றது.

சாந்தன் குடியிருப்பில் புதிதாக அமைக்கப்பட்ட புதுமனைகள் 75 பயனாளிகளுக்கு நேற்று சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கப் பட்டன.

முதல் வைபவமாக முதலாம் இலக்க புதுமனையினை கிளி. முல்லை குருமுதல்வர் தேவசகாயம் அடிகள் நாடாவினை வெட்டி மனையினைத் திறந்து வைத்ததுடன் மனைத்திறப்பினை வீட்டு உரிமையாளரிடம் கையளித்து வைத்தார்.

முன்னதாக மங்கல விளக்கினை கரைச்சிப் பிரதேசச் செயலர் பொன்.நித்தியானந்தன் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ அரசியல் துறைப் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார். அடுத்து தியாகி அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கு கிளி. பிரதேச மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் சசி ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார். அடுத்து குடியிருப்புப் பெயர்ப்பலகையினை கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

ஊரக மேம்பாட்டு சாந்தன் குடியிருப்புப் பொறுப்பாளர் பாவலன் தலைமையில் நடைபெற்ற மண்டப நிகழ்வில் ஆசியுரையினை கிளி. முல்லை குருமுதல்வர் தேவசகாயம் அடிகளும், கருத்துரைகளை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன், அரசறிவியல் கல்லூரியைச் சேர்ந்த அரசண்ணா, ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் அன்பரசன், கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகன், கரைச்சிப் பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன், சேவாலங்கா பிரதிநிதி ரங்கன் ஆகியோர் வழங்கினர். நிர்வாக சேவை வன்னி மாவட்டப் பொறுப்பாளர் பிரியன், கிளி. மாவட்ட நிர்வாக சேவை அலுவலர் ராம்கீ, கிராம சேவை அலுவலர்கள் ஆகியோரும் கலந்து குடியிருப்பாளர்களுக்கு வீட்டுத் திறப்புக்களையும் தமிழீழ தேசியத் தலைவரின் வர்ணப் படங்களையும் கையளித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## இளைஞர் கைது

(கொழும்பு)

வாகன அனுமதிப் பத்திரம், பரீட்சைப் பெறுபேறுகள் மற்றும் பொலிஸ் நற்சான்றுப் பத்திரங்கள் என்பவற்றைப் போலியான முறையில் தயாரித்து வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த இளைஞரை புத்தளத்தில் பொலிசார் கைது செய்துள்ளனர்.

பாலாவி சீமெந்துக் கம்பனியில் கடமையாற்றும் உயர் அதிகாரி என தன்னைப் போலி அடையாள அட்டை மூலம் அறிமுகப் படுத்தியே இந்த மோசடி நடவடிக்கையில் இவ் இளைஞர் ஈடுபட்டுவந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





## இரண்டாம் ஆண்டுநினைவஞ்சலி

## அமரர் வடிவேலு புஸ்பராணி

கெருடாவில், தொண்டமானாறு

மலர்வு 24-12-1926 மறைவு 16-03-2001

அன்போடும் பாசத்தோடும் வாழ்ந்த தெய்வமே
எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே அம்மா!
உங்கள் உடல் எங்களைவிட்டுப் பிரிந்து இரண்டு
ஆண்டுகள் சென்றாலும்,
அம்மா! உங்கள் புன்னகை தவழும் முகமும்
அன்பான வார்த்தைகளும் எங்கள்
இதயத்தை விட்டு நீங்காது அம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கும்,
சகோதரர்கள், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

**தகவல்:**
**வ.சண்முகராஜா (கனடா) - 416-947-9243**
**வ.துரைராசா (கனடா) - 416-538-0704**

(அ.க.7813)

## கணினி பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்

தருமபுரத்தில் அமைந்துள்ள தமிழரசன் கணினி பயிற்சி நிலையத்திற்கு புதிய மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கண்டாவளை கோட்டக் கல்விப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

*முடிவுத்திகதி:- 26-03-2003*

தமிழீழ மாணவர் அமைப்பு
கிளிநொச்சி மாவட்டம்.

(3032)

## புனர்வாழ்வு, புனரமைப்பு அகதிகள் அமைச்சின் மனிதவள அபிவிருத்திப் பிரிவினால் நடாத்தப்படும்

# கணனி பயிற்சிநெறிக்கு ஆட்சேர்த்தல்

மேற்படி பயிற்சி நெறிக்கு முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 30 வயதிற்குட்பட்ட படித்த வேலையற்ற இளைஞர், யுவதிகளிடமிருந்து

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

கல்வித் தகைமை: க.பொ.த. (உயர்தரத்தில் ஆகக் குறைந்தது 3 பாடங்களில் சித்தியும், க.பொ.த. (சாதாரண தரத்தில் ஆங்கில பாடத்தில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்)

பயிற்சிக் காலம்: 04 மாதங்கள்
I. கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.
II. கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

பயிற்சி நடைபெறும் இடம்: புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் பணிமனை.
வயதெல்லை: 18-30 வயதிற்கு உட்பட்டவர்களாயிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி: அரசாங்க அதிபர்,
கச்சேரி,
முல்லைத்தீவு.

விண்ணப்ப முடிவுத் திகதி: 25-03-2003

இத்திகதிக்குப் பிந்திய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "கணனிப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம்" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பத்துடன் கல்வித் தகைமைச் சான்றிதழின் பிரதி, வதிவிட அத்தாட்சிப் பத்திரம், பிறப்புச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

நேர்முகத் தேர்வின் மூலம் பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

மேலதிக விபரங்களுக்கு திட்டமிடல் பிரிவு, கச்சேரி, முல்லைத்தீவு என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**அரசாங்க அதிபர்,**
**கச்சேரி,**
**முல்லைத்தீவு.**

(சி-8024)

## சேரன் வாணிபம்

### அறிவித்தல்

கடந்த 15.03.2003இல் நடைபெற்ற சாரதி பயிலுநர்களுக்கான நேர்முகத்தேர்வில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான மருத்துவ பரிசோதனை

கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது. இதில் தெரிவாகிய அனைத்துப் பரீட்சார்த்திகளையும் தோற்றுமாறு அறியத் தருகின்றோம்.

**நிர்வாகம்,**
**சேரன் வாணிபம்.**

(3031)

## பரீட்சை வழிகாட்டல் கருத்தமர்வு

தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் மாகாணக் கல்விப் பணிமனையின் ஆதரவுடன் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், யாழ். முன்னணி ஆசிரியர்களால் நடாத்தப்படும் 2003 க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தமர்வு.

22.03.2003 சனி காலை 9.00 - 6.00
கிளி.மத்திய கல்லூரி:
புவியியல் - பேராசிரியர் குகபாலன்
கலாநிதி - இராஜேஸ்வரன்
வரலாறு - கலாநிதி - சிற்றம்பலம்
திரு. சத்தியசீலன்
முல்/ புதுக்குடியிருப்பு ம.வி:
தமிழ் - கலாநிதி சிவலிங்கராஜா
திரு. அருந்தாகரன்

இந்து நாகரீகம் -
பேராசிரியர் கோபாலகிருஷ்ணஐயர்
பேராசிரியர் - வேதநாயகம்

23.03.2003 ஞாயிறு காலை 9.00 - 6.00
கிளி.மத்திய கல்லூரி:
தமிழ்
இந்துநாகரீகம்
கணக்கீடு
முல்/ புதுக்குடியிருப்பு ம.வி:
புவியியல்
வரலாறு

(3033) **தமிழீழ மாணவர் அமைப்பு**

# யுத்தத்திற்கு எதிரான பிரேரணை பிரிட்டிஷ் பாராளுமன்றில் தோல்வி!

## எதிர்க்கட்சியினரும் பிளேயருக்கு ஆதரவு



உத்தேச தாக்குதலை எதிர்த்து பிரிட்டன் பாராளுமன்றத்தில் இப் பிரேரணை நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும் எதிர்பார்ப்புக்களுக்கு மாறான சம்ப

( லண்டன்)

அமெரிக்காவுடன் இணைந்து பிரிட்டன் மேற்கொள்ளவுள்ள ஈராக் மீதான தாக்குதலுக்கு பிரிட்டன் பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதுதொடர்பாக கொண்டுவரப்பட்ட பிரேரணையின் மீதான வாக்கெடுப்பில் தாக்குதலுக்கு ஆதரவாக அதிகப்படியான பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

வங்கள் நிகழ்ந்துள்ளமை ஆச்சரியமளிக்கக் கூடிய விடயமாகும்.

அதாவது பெரும்பாலான உறுப்பினர்கள் யுத்தத்திற்கு எதிராகவே வாக்களிப்பர் என எதிர்பார்க்கப்பட்டநிலையில் அதற்கு மாறான சம்பவங்களே நடந்தேறியுள்ளன.

பிரிட்டிஷ் பிரதமந்திரி ரொனி பிளேயரின் பெரும்பாலான ஆதரவாளர்கள் எதிர்க்கும் இந்த யுத்தத்திற்கு பாராளுமன்றத்திலுள்ள பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். பிரெரணைக்கு எதிராக 396 வாக்குகளும் ஆதரவாக 217 வாக்குகளும் கிடைத்துள்ளன.

ஈராக்கிற்கு எதிராக தாக்குதலொன்றை ஆரம்பிப்பதற்கான நியாயம் நிரூபிக்கப்பட வில்லை என்று பிளேயரின் ஆளும் தொழிற்கட்சியில் உள்ள பல உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் இந்தப் பிரேரணை மீதான விவாதத்தின் போது தெரிவித்துள்ளனர்.

எனினும்,எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் யுத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சரணடைய கோரிக்கை

ஈராக் படையினரைச் சரணடைந்து விடுமாறு கோரும் தீவிரப் பிரச்சா ரங்களில் அமெரிக்கப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

துண்டுப் பிரசுரங்கள் வாயிலாகவும், வானொலி மற்றும் ஈமெயில் ஊடாகவும் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## பரிசோதகர்கள் வெளியேற்றம்!

ஐக்கிய நாடுகள் ஆயுதப் பரிசோதகர்கள் நேற்று முன்தினம் ஈராக்கிலிருந்து வெளியேறியுள்ளனர்.

பிரான்ஸ்,கிரேக்கம் ஆகியவற்றின் ஈராக்கிற்கான தூதுவர்களும் அங் கிருந்து வெளியேறியுள்ளனர். தொடர்ந்து ஒரு சில வெளிநாட்டு ராஜதந்திரிகளே ஈராக்கில் தங்கியுள்ளனர்.



கனடாவின் அரச பொது மண்டபத்தில்ஈராக் யுத்தம் குறித்து உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் கனேடியப் பிரதமர்.

# ஈராக்கிற்கு எதிராகச் செயற்படுவோரை எதிர்த்து நின்று போரிட சதாம் உறுதி!

## -தொலைக்காட்சியில் தோன்றி உரையாற்றினார்

(பாக்தாத்)

ஈராக்கிற்கு எதிராகச் செயற்படும் சக்திகளை எதிர்த்து நின்று போரிடப் போவதாக ஈராக் சனாதிபதி சதாம் ஹுசைன் சூளுரைத்துள்ளார்.

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் பகிரங்கமாக சதாம் குடும்பத்தினர் ஈராக்கைவிட்டு வெளியேற வேண்டும் என்ற அறிவிப்பைத் தொடர்ந்து நேற்று முன்தினமிரவு ஈராக் தொலைக் காட்சியில் தமது இராணுவச் சீருடையில் தோன்றிய சதாம் ஹுசைன் தமக்கு எதிரான சக்தி எதனையும் எதிர்த்து நின்று வெற்றி பெறப் போவதாக சூளுரைத்துள்ளார்.

நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தை நடாத்திய அவர் ஈராக்கிய புதல்வர்கள் அனைவரும் தங்கள் நாட்டை ஆக்கிரமிக்கும் எதிரிகளுடன் போரிட்டு அவர்களை முறியடிக்கத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளார் என ஈராக்கின் அரசாங்கத் தொலைக்காட்சி தெரிவிக்கின்றது.

"எங்களுடன் போராடும் அமெரிக்கர்களின் மனைவியரும் அன்னையரும் கண்ணீர் சிந்தாமல் இரத்தத்தையே சிந்துவார்கள்" என சதாமின் மூத்த புதல்வன் கூறியுள்ளார்.



அமெரிக்காவின் ஆபிரகாம் லிங்கன் விமானம் தாங்கிக் கப்பலில் களஞ்சியக்காப்பாளராகக் கடமையாற்றும் படைச்சிப்பாய் ஒருவர் இரசாயனத் தாக்குதலிலிருந்து பாதுகாக்கும் முகமூடியை அணிந்தவாறு ஸ்போட்ஸ் ஸ்ரார் பத்திரிகையைப் படித்துக்கொண்டிருக்கிறார்.


## அமெரிக்காவில் பூரண அமைதி; நிகழ்வுகளைப் புஷ் தவிர்ப்பு!

(வாஷிங்டன்)

அமெரிக்கா முழுவதும் ஒருவித அமைதி நிலைதோன்றியிருப்பதாக அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன. போர் எந்நேரத்திலும் ஆரம்பமாகலாம் என்கிற நிலையில் இத்தகைய நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும்,சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் பொதுவைபவங்கள் எதிலும் பங்கேற்பதைத் தவிர்த்து வருகின்றார்.

இதேவேளை, ஈராக் மீது யுத்தம் தொடுக்கப்பட்டால் அந்த நாட்டிற்குள்ளேயோ வெளியிலோ இருக்கும் அமெரிக்கர்கள் அனைவருக்கும் பேராபத்து ஏற்படும் என ஐக்கிய நாடுகள் சபைக்கான ஈராக் தூதுவர் எச்சரிக்கை விடுத்துள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



ஜெருசலேமில் உள்ள இஸ்ரேலிய வைத்தியசாலையில் உயிரியல் ஆயுதத் தாக்குதலிலிருந்து பாதுகாப்புத்தேடும் நோக்கத்தோடு யன்னல்களை அடைக்கும் இஸ்ரேலியத் தொழிலாளர்கள்.

# புதிய பிரதமருக்கான நியமனத்தை பலஸ்தீன பாராளுமன்றம் ஏற்பு!

பலஸ்தீன பாராளுமன்றம் பலஸ்தீன அதிகாரசபைக்கான புதிய பிரதம மந்திரியின் நியமனத்தை நேற்று முன்தினம் அங்கீகரித்துள்ளது.

புதிய பிரதம மந்திரியின் நியமனம் குறித்து அமெரிக்கா பாராட்டுத்தெரிவித்த போதிலும் சனாதிபதி யசீர் அரபாத் தொடர்ந்தும் முக்கிய பதவிகளைத் தம்வசம் வைத்திருப்பது குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளது. சமாதானத்திற்கான பாதையைத் திறப்பதற்கென அரபாத்தின் அதிகாரங்களைக் குறைக்குமாறு அமெரிக்கா தெரிவித்த அரசியல் சீர்திருத்தங்களை யசீர் அரபாத் ஏற்றுக் கொண்டமை குறித்து அமெரிக்கா அவரைப் பாராட்டியுள்ளது

எனினும் முக்கிய பதவிகளான பாதுகாப்பு விவகாரம் மேற்குக் கரையிலும் காஸா பகுதியிலும் அமைதியை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் அரபாத்தின் கையில் இருப்பது குறித்து அமெரிக்கா அதிருப்தி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## படையினர் விடுமுறை ரத்து; போருக்கு குவைத்தும் தயார்!

குவைத் இராணுவம் தனது வீரர்களின் விடுமுறைகளை ரத்துச் செய்து இராணுவ நிலைகளுக்கு திரும்புமாறு உத்தரவிட்டுள்ளது.

அயல்நாடான ஈராக் மீது அமெரிக்கா தலைமையில் மேற்கொள்ளப்படவுள்ள போருக்கு அது தயாராகி வருவதாக குவைத்தின் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்காவும் பிரிட்டனும் சுமார் இரண்டு இலட்சத்து எண்பதினாயிரம் துருப்புக்களை இந்தப் பிராந்தியத்தில் நிலைகொள்ளச் செய்துள்ளன. இவற்றில் குறைந்தது அரைவாசிப்பேராவது குவைத்தின் அருகிலேதான் இருக்கிறார்கள்.

சனாதிபதி ஜோர்ஜ் புஷ் உத்த ரவிடும் பட்சத்தில் தாக்குதல் நடத்தத்தயார் என்று அமெரிக்கப் படையணித் தளபதிகள் தெரிவித்துள்ளனர்.

# இரசாயன, உயிரியல் ஆயுதங்களை ஈராக் பயன்படுத்தாது

## - கான்ஸ் பிலிக்ஸ் நம்பிக்கை

அமெரிக்காவுடனான யுத்தத்தின் போது ஈராக் இரசாயன அல்லது உயிரியல் ஆயுதங்களைப் பயன்படுத்தும் எனும் நம்பிக்கை தனக்கு இல்லையென ஐக்கிய நாடுகள் சபையின் பிரதம ஆயுதப் பரிசோதகர் கான்ஸ் பிலிக்ஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை தீர்மானத்திற்கு அமைய இன்னும் 12 முக்கிய ஆயுத உற்பத்தித் திட்டங்கள் குறித்து ஈராக் விபரங் களைத் தெரிவிக்க வேண்டியுள்ளதாக பிலிக்ஸ் மேலும் கூறியுள்ளார்.

# பொடோ சட்டத்தால் தடுமாறும் மத்திய அரசு



மத்திய அரசு அளித்த உறுதிமொழிக்கு மாறாக தமிழக அரசு "பொடோ சட்டத்தை" பழிவாங்கும் போக்கில் பயன்படுத்தி, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் 'வை. கோ.', தமிழர் தேசிய கழகத் தலைவர் 'நெடுமாறன்' ஆகியோரை கைது செய்து சிறையில் அடைத்து உள்ளதை திராவிட முன்னேற்றக்கழகத் தலைமையில் 11 கட்சிகள் கண்டித்து, எதிர்வரும் 29ஆம் திகதி தமிழ்நாடு முழுவதும் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவுள்ளது.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. உட்பட 09 ம.தி.மு.க.வினர் "புலிகளை ஆதரித்துப் பேசியதாக" கடந்த ஆண்டு யூலை மாதம் பொடோ சட்டத்தில் கைதாகி வேலூர், மத்திய சிறையில் உள்ளனர்.

அதே பொடோ சட்டத்தில் "புலிகளை ஆதரித்துப் பேசியதாக" தமிழர் தேசிய இயக்கத் தலைவர் நெடுமாறனும் கைதாகி கடலூர் சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் "பொடோ சட்டப் பிரேரணை" கொண்டு வரப்பட்டபோது, இச்சட்டம் தவறான முறையில் அமுல்படுத்தப்படும் சாத்தியம் உள்ளதாகவும், முக்கியமாக அரசியல் எதிரிகளை நோக்கி இச்சட்டம் பாயும் என்றும் எதிர்க்கட்சிகள் அச்சம் தெரிவித்தன.

ஆனால், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முழுமனதாக பொடோ சட்டத்தை ஆதரித்தது. ஆயினும், ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் கூட்டணிக் கட்சிகள் தயக்கத்துடன்தான் ஆதரவு வழங்கின.

"பயங்கரவாதிகளுக்கு எதிராகக் கொண்டு வரப்படும் இந்தச் சட்டத்தை மாநில அரசுகள் தவறாகப் பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம்" என்று அப்போது உறுதியளித்தவர் உள்துறை அமைச்சர் 'அத்வானி' (இன்றைய துணைப்பிரதமர்)

அதிரடியான முடிவுகளை எடுக்கும் தமிழக முதலமைச்சர் 'ஜெயலலிதா' உடனடியாக இச்சட்டத்தை ஆதரிப்பதாகப் பச்சைக் கொடி காட்டியமை எதிர்க்கட்சிகளுக்கு சிவப்புக் கொடியாக கலக்கத்தை அன்று உருவாக்கியது என்பது உண்மைதான்.

மறுபுறம் பாரதீய ஜனதாக் கட்சியின் கூட்டுக் கட்சிகள் எனும் முறையில் தி.மு.க., ம.தி.மு.க. இரு கட்சிகளும் பொடோ

**அ. கலைவாணி**

சட்டத்தை ஆதரிப்பதாக திருக்கரங்களை உயர்த்தின.

இப்போது அதே 'பொடோ சட்டம்' அவர்கள் மீது பாயும் போதுதான் தவறாகப் பயன்படுத்தப்படுவதாக ஆயாசப்படுகின்றனர்.

அரசியல் எதிரிகளை வீழ்த்துவதற்குத் தருணம் எப்போதுவரும் எனக் காத்திருந்த தமிழக முதலமைச்சருக்கு, வை.கோ., நெடுமாறன் இருவரும் "பொதுக் கூட்டங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியமை" சாட்சியாக அமைந்தது புத்துணர்ச்சியுடன் பொடோ சட்டத்தின் கீழ் அவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்து விட்டார்.

வேலூர் சிறையில் இருந்த வை.கோ.வை நேரில் சென்று பார்வையிட்டதுடன், ஆதரவாகவும் குரல் எழுப்பியவர் தி.மு.க. தலைவர் 'கருணாநிதி'.

அது மட்டுமன்றி ஒரு கோடி மக்களிடம் கையெழுத்து வாங்கும் முயற்சியை ம.தி.மு.க. தொடங்கியபோது அதில், முதல் கையொப்பம் இட்டவரும் கருணாநிதிதான்.

"நான் சிறையில் இருந்தாலும் கருணாநிதி நேரில் வந்து பார்வையிட்டதுடன், முதல் கையொப்பம் இட்டமையும் என்னை நெகிழ வைத்துள்ளது" என்று வை.கோ. கூறினார்.

கையெழுத்து இயக்கம் தொடங்கியவுடன், தமிழக காவல்துறை வை.கோ. மீதான குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது. அதாவது, வை.கோ. கைதாகி 172 நாட்கள் கடந்த நிலையில்.

518 பக்கங்கள் கொண்ட இக்குற்றப் பத்திரிகை, 115 சாட்சியங்கள், 106 ஆவணங்கள், 154 வாக்கு மூலங்கள் என்பவற்றுடன், வீடியோ கெசட் உட்பட 23 ஆதாரங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வளவு ஆதாரங்களையும் தமிழ்நாட்டு காவல்துறை தயார்படுத்தத்தான் 172 நாட்கள் தேவைப்பட்டதா...? தி.மு.க. கருணாநிதி முதல் கையொப்பம் இட்டமைதான் தமிழக முதலமைச்சரை உசுப்பி விட்டதா...? என அவதானிகள் வினா எழுப்பியுள்ளதுடன், இவ்வளவு ஆதாரங்கள், சாட்சியங்களை நீதிபதி பார்வையிட்டு, இரு தரப்புவாத பிரதிவாதங்கள் நடைபெற்று, தீர்ப்பு வழங்குவதற்குள் ஆண்டுகள் பல சென்றுவிடும் என்றும் கூறுகின்றனர்.

வை.கோ. சிறையில் அடைக்கப்பட்டதுடன், ம.தி.மு.க.கட்சிக்கு சோதனைக் காலம் தொடங்கிவிட்டது எனலாம். தமிழகத்தில் ஏற்படும் பல பிரச்சினைகளுக்கு இக் கட்சியினால் பெரிய அளவில் போராட்டங்கள் செய்ய முடியாதுபோயுள்ளது.

ஏனெனில், காவிரி நீர்ப் பிரச்சினை என்றாலும் சரி, சாதாரண தொழிலாளர்களின் பிரச்சினை என்றாலும் சரி, இதுவரை ம.தி.மு.க. தனது எதிர்ப்பை முழு அளவில்



காட்டிவந்தது என்கின்றது அரசியல் வட்டாரங்கள்.

ஆனால், வை.கோ. சிறை சென்றபின்பு மிகவும் முக்கியமான பிரச்சினை என்றால் மட்டும், கட்சியின் மூத்த தலைவர்கள் சிறைக்குச் சென்று வை.கோ.வைச் சந்தித்து, அதன் பின்பு, "வை.கோ. இவ்வாறு கூறியுள்ளார்" என்று கட்சி அறிக்கை விட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

வை.கோ.வின் கைதைக் கண்டித்து, ஆரம்பத்தில் மத்திய அமைச்சரான 'கண்ணப்பன்' சூடாக மத்திய அரசுக்கு சவால் விட்டது உண்மையானாலும், 'கண்ணப்பனை அமைச்சரவையில் இருந்து நீக்க வேண்டும்' என்று பிரதமருக்கு, தமிழக முதலமைச்சர் கடிதம் எழுதியதுடன் கண்ணப்பனின் வேகம் தணிந்துவிட்டது. இதனால்தான் பா.ஜ.கட்சியின் அகில இந்தியத் தலைவர் 'வெங்கையா நாயுடு' வை.கோ.வை சிறையில் சென்று பார்த்தபோதும், 'கண்ணப்பன்' சிறைப் பக்கம் எட்டிக்கூடப் பார்க்கவில்லை.

இந்திய நாடாளுமன்றத்தில், பொடோ சட்டம் நிறைவேற்றப்பட்டபோது, 'இது தவறாகப் பயன்படுத்தப்படமாட்டாது' என உறுதியளித்த அத்வானி மாநில அரசுகளின் சட்ட வரைபுக்குள் மூக்கை நுழைக்க முடியாமல் தற்போது தவித்துக் கொண்டிருக்கின்றார்.

இந்திய ஒற்றுமைக்காக, இயற்றப்பட்ட பொடோ சட்டத்தை மாநில முதல்வர்கள் தமது அரசைத் தக்கவைப்பதற்காக பிரயோகிப்பதால், நாடாளுமன்ற நடவடிக்கைகள் பாதிப்படைகின்றன.

உத்தரப் பிரதேச மாநிலத்தின் முதல்வர் மாயாவதி, முன்னைய மந்திரியான சட்டமன்ற உறுப்பினர் 'ராஜா பையயா', சட்டசபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை என்பதற்காக, பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர் என ராஜா பையயாவுடன்



அவரது தந்தையையும் பிணையில் வெளிவர முடியாதபடி, பொடோ சட்டத்திற்குள் இறுக்கியுள்ளார்.

அதேபோல், "குஜராத் மாநிலத்தில்" கோத்ரா ரயில் எரிப்புடன் தொடர்புடையவர்கள் என்று கைது செய்யப்பட்ட 05 இஸ்லாமியர்கள், மேல் முறையீடு செய்து விடுதலை ஆனார்கள்.

ஆனால், குஜராத் முதல்வர் நரேந்திர மோடியோ பொடோ சட்டத்தைப் பயன்படுத்தி விடுதலையான இஸ்லாமியர்களை மீண்டும் கைது செய்ய உத்தர விட்டுள்ளார்.

இவ்வாறு அரசியல் எதிரிகள் மீதுதான் பொடோ சட்டம் பாய்கின்றது என்றால், 'ஜார்கண்ட் மாநிலத்தில்', கம்யூனிஸ் இயக்கத் துண்டுப் பிரசுரங்கள் வைத்திருந்ததாக 24 பண்ணைத் தொழிலாளிகள் பொடோ சட்டத்தின் கீழ் கைதாகியுள்ளனர். இவர்களில் 10 வயது சிறுவர்களும், 81 வயது முதியவரும் அடங்குகின்றனர்.

ஆனால், "காஷ்மீர் மாநிலத்தின்" முதல்வர் மட்டும், தீவிரவாதிகளை ஒடுக்க இந்திய அரசால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை தனது மாநிலத்தில் அமுல்படுத்தப் போவதில்லை என்று கூறி சிறையிலிருக்கும் தீவிரவாதிகளை விடுதலை செய்வதுடன், அவர்களுடன் பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டு வருகின்றார்.

இவ்வாறு மாநிலங்களுக்கு மாநிலம் பொடோ சட்டம் வெவ்வேறு வடிவங்களில் அரசியல் எதிரிகளை, மக்களை, குழந்தைகளை நோக்கிப் பாய்வதனால் மத்திய அரசு சிக்கலுக்குள்ளாகியுள்ளது.

மறு புறம் தமிழகத்தில், பொடோ சட்டத்தை எதிர்த்து அனைத்துக் கட்சிகள் கூட்டம் கடந்த 12 ஆம் திகதி நடைபெற்றுள்ளது.

இக் கூட்டத்தில் ஆயுதம் தாங்கி, கலவரத்தை உருவாக்கி, உயிர்ப் பலி கொள்ளும் தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காகவே ஏற்படுத்தப்பட்ட பொடோ சட்டம், தற்போது தேர்தல் ஆணையப் பதிவு பெற்ற பொதுச் செயலாளரும், மக்களால் தேர்வு செய்யப்பட்ட, பாராளுமன்ற உறுப்பினருமான வை.கோ.வையும் அவரது நிர்வாகிகளையும், தமிழர் தேசியத் தலைவரையும் கைது செய்திருப்பது துணைப்பிரதமர் வழங்கிய உறுதி மொழிக்கு எதிரானது

எனவே இவர்கள் விடுதலையாக வேண்டும் இல்லையேல், தமிழ் நாடு முழுவதும் உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கப்படும் என அக்கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

இதனால், துணைப்பிரதமர் அத்வானி, பொடோ சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதை தடுக்கவும், அச்சட்டத்தின் செயற்பாட்டை மீளாய்வு செய்யவும் குழு ஒன்றை, பஞ்சாப்-ஹரியானா உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியின் தலைமையில் அமைத்துள்ளதாக கடந்த 14 ஆம் திகதி மக்களவையில் அறிவித்துள்ளார்.

பொடோ சட்டம் தவறாகப் பயன்படுத்துவது பற்றிய குற்றச்சாட்டுக்கள் மாநிலங்களின் மீதுதான் வந்துள்ளதே தவிர, மத்திய அரசு மீது குற்றச்சாட்டுக்கள் வரவில்லை என்பதுடன், " சட்டம், ஒழுங்கு" என்பன மாநிலங்கள் சமபந்தப்பட்ட விடயங்களாக இருக்கையில், மத்திய அரசு அதில் தலையிட முடியாதுள்ளது.

எனினும், குறிப்பிட்ட சில சூழ்நிலைகளுக்காகவே பொடோ சட்டம் இயற்றப்பட்டதால், அது பயன்படுத்தப்படும் விதம் கண்காணிப்பதில் மறு ஆய்வுக் குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையே, வை.கோ.வும் அவருடன் 09 ம.தி.மு.கவினரும் சென்னை அருகே பூந்தமல்லி பொடோ நீதிமன்றத்தில் கடந்த 17 ஆம் திகதி ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

வை.கோ. நீங்கலாக, ஏனைய 09 பேரும் தம்மை விடுதலை செய்யக் கோரி மனுத்தாக்கல் செய்தமையினால், இவர்களது மனு விசாரணைக்கு உட்படுத் தப்பட்டு, இவர்களது காவல் எதிர்வரும் 07 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி,பொடோ சட்டத்தின் இருபத்தோராவது பிரிவை எதிர்த்து வை.கோ. சுப்ரீம் கோட்டில் தாக்கல் செய்த வழக்கு இம்மாதம் 25 ஆம் திகதியே விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளது. வை.கோ. தொடர்ந்த வழக்கில் வழக்கறிஞர் "நாரமன்" "எந்தவொரு இயக்கத்துக்கும் வாய் மொழியான ஆதரவுக் கருத்தை தெரிவிப்பது சட்டப்படி குற்றமாகாது." என்று வாதாட வுள்ளார்.

அதே நேரம் விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர் திருமாவளவன் பொடோ சட்டத்தினுள் நசுக்கப்பட உள்ளதாகப் பரபரப்பாக எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்ட போதும், தமிழக அரசு இந்நடவடிக்கைக்கு தற்காலிக ஓய்வு கொடுத்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

ஏனெனில், திருமாவளவன், வை.கோ, நெடுமாறன் சிறையிலுள்ள போதும் தயக்கமில்லாமல் அண்மையில் எமது யாழ் நகரில் நடைபெற்ற தமிழ்க்கூடல் மாநாட்டில் கலந்து கொண்டமைக்காகவே.

எனினும் தற்போது, திருமாவளவனின் கைது தள்ளி வைக்கப்பட்டுள்ளதே தவிர, முற்றாக கைவிடப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

ஆனால், பொடோ சட்டம் திரும்பவும், சூடுபிடித்துள்ளது என்பதற்கு, "தமிழ் முழக்கம்" பத்திரிகையின் வெளியீட்டாளர் "சாகுல் ஹமீத்" தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்து சென்னையில் கூட்டம் ஏற்பாடு செய்தார் என்று தற்போது கைது செய்யப் பட்டுள்ளமை சான்றாகும்.

இவற்றைப் பார்க்கையில், எதிர் வரும் 29 ஆம் திகதி நடைபெறப்போகும் உண்ணாவிரதப் போராட்டம், நெடுமாறன், வை.கோ. அவருடன் 09 ம.தி.மு.க. வினர் போன்றோரின் விடுதலைக்கு வழி வகுக்குமா...... அல்லது போராட்டத்தை நடத்துபவர்கள் பொடோ சட்டத்தினுள் அகப்பட்டுக் கொள்வார் களா.... என்பது தற்போதைய வினாவாக இருக்கின்றது.

எனினும், போராட்டம் வலுப்பெற்று வை.கோ விடுதலையானால், எல்லா மாநிலங்களிலும் இது நன்மை தரும் விடயமாகவும் அமையக் கூடும்.

ஆனால், 2004 நாடாளுமன்றத் தேர்தல் வருவதற்குள் இன்னும் எத்தனை பேரை நோக்கி பொடோ பாயப் போகின்றது என்பதற்கு காலம் தான் பதிலிறுக்க முடியும்.

# ஈராக் மீதான தாக்குதல் எவ்வேளையிலும் நடக்கலாம்!

ஈராக் மீதான தாக்குதலை தடுப்பதற்கான, தவிர்ப்பதற்கான இறுதிக்கட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியைத் தழுவியுள்ள நிலையில், போருக்கான நாள் நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. அமெரிக்காவும் அதனோடு கூட்டுச் சேர்ந்துள்ள பிரிட்டனும் போரிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து முடித்துவிட்டுள்ளன. போர் இன்றோ நாளையோ இடம் பெறலாம். அல்லது எப்போது நடைபெறப் போகின்றது. எந்த நேரத்தில் ஆரம்பமாகின்றது என்பதே அனைவரது கவலை மிகுந்த எதிர்பார்ப்பாக வுள்ளது.



அமெரிக்கா இறுதியாக அறிவித்த, சதாம் ஹுசைனையும் அவரது குடும்பத்தினரையும் 48 மணி நேரத்திற்குள் நாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்ற காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்து விட்டது. ஈராக்கும் அமெரிக்கா, பிரிட்டன் ஆரம்பிக்கவுள்ள போரை எதிர்கொள்ள ஆயத்தமாகிவிட்டது.

ஈராக்கிய மக்கள் மற்றும் வளைகுடா பிராந்தியத்திலுள்ள மக்கள் அனைவரும் மிகுந்த அச்சத்துடனேயே ஒவ்வொரு வினாடியையும் கடந்து கொண்டிருக்கின்றனர். இந்தப் போரை தவிர்க்க முடியாதா? போர் ஏன் நடைபெற வேண்டும்? இதனால் உருவாகவுள்ள பேரிழப்புக்கள் எதற்காக? என்ற பல கேள்விகளுக்கு விடை தெரிந்தும் முழு உலகமுமே மௌனமாக இருக்கிறது.

உலகம் தழுவிய ரீதியில் போருக்கான ஆதரவுகள் அருகி வரும் நிலையில் அமெரிக்காவும் பிரிட்டனும் தமது நிலைப்பாட்டில் உறுதியாகவும் நம்பிக்கையுடனும் இருப்பது ஒருவகையில் வேடிக்கையாக இருப்பினும் பேரச்சத்தை ஏற்படுத்தும் ஒன்றாகவும் அமைந்துள்ளது. சர்வதேசமே போர் குறித்து அச்சமடைந்துள்ள நிலையில் இவர்கள் போரை எப்பாடுபட்டாவது நடத்திவிட கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

ஈராக் மீதான போரை அமெரிக்கா, பிரிட்டன், ஸ்பெயின் ஆகிய நாடுகளே நடத்தி விடுவதில் குறியாக நிற்கின்றன. தற்போது போர்த்துக்கலும் இணைந்திருப்பது போல் தெரிகிறது. அமெரிக்கா, பிரிட்டனுக்கு சார்பான பெரும்பாலான நட்பு நாடுகளே போர் விடயத்தில் மௌனம் சாதித்தும் எதிர்த்தும் வருகின்றன. இதைவிட ஒட்டுமொத்த உலகமுமே போர் ஒன்று ஏற்படுவதனை விரும்பவில்லை. போரை எப்பாடுபட்டாவது தடுத்துவிட வேண்டும் என்ற நோக்கில் உலக மக்கள் பெரும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அமெரிக்கா, பிரிட்டன் நாடுகளில் கூட எதிர்ப்புக்கள் தலைதூக்கியுள்ளன. ரொனி பிளேயரின் அரசைக் கூட ஆட்டம்காண வைக்கும் வகையில் பிரிட்டிஷ் மக்கள் போருக்கு எதிராகக்குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளனர். இந்நிலையில் அமெரிக்கா, பிரிட்டன் இணைந்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் அடுத் தடுத்து கொண்டு வந்த இரு தீர்மானங்கள் வெற்றி யளிக்காத நிலையில் தமக்கான ஆதரவு கிடைக்காதென்ற ஆதங்கத்தின் வெளிப்பாடுகள் தான் ஐ.நா.வையே மாற்றியமைப்போம் என்கிற எச்சரிக்கையாகும்.

உண்மையில் ஐக்கிய நாடுகள் சபை இன்று இரண்டுபட்டு நிற்கின்றது ஈராக் போரை ஆதரித்து ஒரு அணியினரும், அப்போரை எதிர்த்து ஒரு அணியினரும் செயற்பட்டு வருகின்றனராயினும் நடுநிலை வகித்து மௌனம் சாதிக்கும் நாடுகள் கூட தற்போது வெளிப்படையாகப் போரை எதிர்த்துக் கருத்துக் கூற முற்பட்டுள்ளன. அத்தோடு ஐ.நா. பொதுச் செயலாளர் கொபி அனான் மற்றும் தலைமை ஆயுத பரிசோதனை யாளர்கள் கூட போரைத் தவிர்க்கவே பெரும்பாடுபடுவதுபோல் தெரிகிறது. உண்மையில் ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருந்தால் அவற்றை எப்பாடுபட்டாவது அமைதி வழியில் களைந்து விடுவதிலேயே இவர்கள் கவனம் செலுத்தி வருகின்றனர். இத்தகைய நடவடிக்கைகள் அமெரிக்காவையும் அதனோடு துணை நிற்கும் பிரிட்டனையும் ஆத்திரமடையச் செய்துள்ளதென்றே துணிந்து கூறலாம்.


அமெரிக்கா உலகின் வல்லரசாகத் திகழ்கின்றது. பொருளாதார, இராணுவ மற்றும் அரசியல் ரீதியில் அமெரிக்கா தன்னை மிகப் பலம்பொருந்திய நாடாக வளர்த்துள்ளது; கருதியும் வருகிறது. அத்தோடு, தான் நினைத்த மாதிரி உலகைக் கட்டுப்படுத்தவும் முனைந்து நிற்கின்றது. அமெரிக்காவின் போக்கிற்கு ஆட்டம் போடும் பிரிட்டனை விடுத்து அனேகமான உலக நாடுகள் அதனை விரும்பவில்லை. அண்மைக்காலமாக அமெரிக்காவின் கொள்கைகள் செயற்பாடுகளை இந்நாடுகள் கடுமையாக விமர்சித்தும் எதிர்த்தும் வருவதையே காணமுடிகிறது. ஆப்கான் மீதான போரிற்கு ஆதரவாக குரல்கொடுத்த நாடுகள் எல்லாம் இன்று ஈராக் போரிற்கு கடுமையான



ஈராக் மீதான தாக்குதலை நடத்த தரையிலும், கடலிலும் நிலை கொண்டுள்ள அமெரிக்க படையினர்

எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றன. இது ஒருவகையில் பார்த்தால் ஈராக்கின் முக்கியத்துவ மாகக் கூட இருக்கலாம்.

பாரசீக வளைகுடா நாடுகளில் ஒன்றான ஈராக் எண்ணெய் வளத்தை மிக அதிகளவில் கொண்டுள்ள நாடுகளில் ஒன்றாகும். இது ஈராக் மீதான படையெடுப்புக்கு மிக முக்கியமான காரணமாகவும் அதனை எதிர்ப்பதற்குமான காரணமாகவும் கூட இருக்கலாம். ஈராக்கை எப்பாடுபட்டாவது கைப்பற்றிவிட்டால் தமது ஆதரவிலான அரசொன்றை நிறுவி அதன் எண்ணெய்வளத்தைத் தானே அனுபவித்துவிட அமெரிக்கா பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. பிரிட்டனும் தானும் கூட்டுச் சேர்ந்தால் தனக்கும் ஒரு பங்கு கிடைத்துவிடும் என்ற நப்பாசை. ஏற்கனவே வளைகுடா நாடுகளில் சிலவற்றை தன் ஆதிக்கத்தில் வைத்துள்ள அமெரிக்கா, ஈராக்கையும்



தனது ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்தால் முழு மத்திய கிழக்கையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவரலாம் என எண்ணுகிறது. இதன் மூலம் முழு உலகையுமே தனது செல்வாக்குக்கு உட்படுத்தலாம் என்று கூட அமெரிக்கா நினைக்கலாம். எனினும் ஏனைய உலக நாடுகள் குறிப்பாக வளர்ச்சியடைந்த நாடுகள் அமெரிக்காவின் இந்தப் போக்கை நிச்சயமாக விரும்பப்போவதில்லை. இதுவே போரை எதிர்ப்பதற்கான பிரதான காரணமாகக் கூட இருந்தால் அதுவொன்றும் ஆச்சரியமளிக்கக் கூடிய தொன்றாக இருக்கப்போவதுமில்லை. அத்தோடு போர் என்று வந்துவிட்டால் நிச்சயம் பெரும் மனித அழிவுகளும் சொத்தழிவுகளும் இருக்கும். பெற்றோலியப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவும். அதுதவிர பெற்றோலிய வளத்திற்காக வேறு பிரதான நாடுகள் கூட போரில் குதிக்க வழியேற்பட்டு விடுமோ என்ற அச்சம் கூட எழுந்துள்ளது. இந்தப் போர் நாடுகளிடையே பெரும் பொருளாதார பின்னடைவுக்கு வழியேற்படுத்தி விடப் போகின்றது.

ஈராக் குவைத்தை ஆக்கிரமித்தது என்பது பாரிய குற்றம். அதற்காக அமெரிக்கா போரிட்டு குவைத்தை மீட்டதோடு, ஈராக்கின் சில பகுதிகளையும் அழித்திருந்ததுடன் ஐ.நா.வின் துணையுடன் அதன் மீது பொருளாதாரத் தடையொன்றையும் விதித்தது. அத்தடை இன்றுவரை தொடர்கிறது. எனினும் ஈராக் தொடர்ந்தும் அச்சுறுத்தலாக அமைகிறது. அது பேரழிவு ஆயுதங்களைப் பெருமளவில் உற்பத்தி செய்துவைத்திருக்கிறது என்றெல்லாம் அமெரிக்காவும்,பிரிட்டனும் கூறிவருகின்றன.பேரழிவு ஆயுதங்கள் என்பது அமெரிக்காவிடமும் பிரிட்டனிடமும் நிறையவே இருக்கின்றன. உலக நாடுகள் பலவும் இவற்றை உற்பத்தி செய்தோ,கொள்வனவுசெய்தோ வைத்திருக்கின்றன. எனினும் இவற்றையெல்லாம் விட்டுவிட்டு ஈராக் மீது மட்டும் நிர்ப்பந்தத்தைக் கொடுப்பது என்பது உகந்ததொன்றாக அமைந்துவிடப்போவதில்லை. ஏற்கனவே போரின் கொடூரங்களால் சிதைக்கப்பட்டுள்ள ஈராக்கிய மக்களின் வாழ்வு மேலும் சிதைவுறவே இது வகைசெய்வதாக அமையப்போகின்றது என்பதே உண்மை.

அமெரிக்க சனாதிபதியினதும்,பிரிட்டிஷ் பிரதமரினதும் இறுதிக் கட்டப் பேச்சுக்களும் அதன் வாயிலாக விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கைகளும் கூட போரிற்கு நிச்சயமாக கட்டியம் கூறுவதாகவே அமைந்துள்ளன. போர் எந்நேரம் ஆரம்பமாகும் என்பதே தற்போதுள்ள கேள்வியாகும். ஆனால் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சினதோ அன்றி ரொனி பிளேயரினதோ பதவிகளை அது ஆட்டம் காண வைத்துவிடுமா? அல்லது ஈராக் இதனை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றது. சர்வதேசம் இறுதி நேரத்தில் என்ன செய்யப் போகின்றது என்பனவே தற்போதுள்ள கேள்விகளாகும். இவற்றிற்கு எதிர்கால நிகழ்வுகளே பதில்களாக அமையப்போகின்றன. இன்று ரொனிபிளேயரின் முடிவு என்பதை விட ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சினது முடிவிலேயே எல்லாம் தங்கியிருக்கின்றன.

- அனிக்கிலஸ்

## முக்கிய கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்தில் (விசுவமடு, வட்டக்கச்சி, கிளிநொச்சி, பளை, பூநகரி, முழங்காவில், கந்தபுரம்) உள்ள தனியார் வாடகைப்பணி செய்யும் உந்துருளி, ஆட்டோ ஆகியவற்றின் உரிமையாளர்களுடனான கலந்துரையாடல் 23-03-2003 ஆம் நாள் ஞாயிறு மாலை 3.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவிருப்பதால் தவறாது கலந்துகொள்ளுமாறு தங்களை வேண்டுகின்றோம்.

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி
வழியனுமதிப்பணியகம்.

(சி-8022)



## முக்கிய கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்தில் (விசுவமடு, வட்டக்கச்சி, கிளிநொச்சி, பளை, பூநகரி, முழங்காவில், கந்தபுரம்) உள்ள தனியார் பயணியர் ஊர்தி வாடகைப் பணி செய்யும் கையஸ், டொல்பின் ஆகிய உரிமையாளர்களுடன் கலந்துரையாடல் 23-03-2003 ஆம் நாள் ஞாயிறு காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற விருப்பதால் தவறாது கலந்துகொள்ளுமாறு தங்களை வேண்டுகின்றோம்.

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி
வழியனுமதிப்பணியகம்.

(சி-8023)



## ஓராண்டுதனில் நினைவு கூடுகின்றோம்

தோற்றம்
1917
□
02
□
14



மறைவு
2002
□
03
□
30

## அமரர் சின்னத்தம்பி வினாசித்தம்பி

திதி: 20-03-2003

மன்னாரம் பதியின் கள்ளியடியூரில்
மகிழ்வுடனே அவதாரித்த கோமகனே
எண்பத்தைந்து அகவுகளாய்
எம்முடனே வாழ்ந்திருந்த தலைமகனே.

வேளாண்மைத் தொழில் செய்து மேதினியில்–எம்மை
மேன்மையுடன் வாழவைத்த குலமகனே
ஓர்நூறு ஆண்டானாலும் உம் நினைவு
எம்மனதில் நிலைத்து நிற்கும்.
ஓராண்டு ஆகிவரும் இந்நாளில் – ஐயா
உங்கள் நினைவுதனில் நிலைத்து நிற்கின்றோம்.

கள்ளியடி,
இலுப்பக்கடவை,
மன்னார்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(2983)


# மட்டக்களப்பு நகரில் படையினர் சோதனை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் மீண்டும் சிறிலங்காப் படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆயுதம் தரித்த பொலிசாரும், சிறிலங்காப் படையினரும் பகல் வேளைகளில் முக்கிய கேந்திர நிலையங்களில் சோதனைகளை மேற்கொண்டு வருவதுடன் இரவு வேளைகளில் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அம்பாறை கண்காணிப்புக்குழு புலிகளுடன் சந்தித்துப் பேச்சு

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் மாலை சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

கொக்கட்டிச்சோலையிலுள்ள விடுதலைப் புலிகளின் மாவட்டச் செயலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் விசேட அதிரடிப்படையினருக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையிலான மாதாந்த சந்திப்புக்களை நடத்துவது என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருடனான சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பதிவு செய்க

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சகல வாகன உரிமையாளர்களையும் தங்கள் பகுதி கிராம சேவை அலுவலர்களிடம் வாகனப் பதிவுகளை உடன் மேற்கொள்ளும் வண்ணம் கிளி. கரைச்சி பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன் வேண்டியுள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையிலேயே மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (சோ)

## 347 பேருக்கு நியமனம்

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் ஆசிரியர் டிப்ளோமாப் பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்துள்ள 347 பேருக்கு நியமனங்களை வழங்க வடக்கு-கிழக்கு மாகாணக்கல்வியமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அடுத்தமாதம் இதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள தேசிய பாடசாலைகள், மற்றும் மாகாண சபையின் கீழ் உள்ள பாடசாலைகளுக்கு இவர்கள் நியமிக்கப்படலாம் எனத் தெரியவருகின்றது.

# பிறப்பு, இறப்பு பத்திரங்களை இன்று பெற்றுக்கொள்க

(கிளிநொச்சி)

பிறப்பு, இறப்புப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர் இ.உதயகுமாரன் தெரிவித்துள்ளார்.

கரைச்சிப் பிரதேசச் செயலகத்தில் கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற மேலதிக மாவட்டப் பதிவக இடம்பெயர் சேவையின்போது பதிவாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்டு அன்று உரியவர்களிடம் வழங்கப்பட்டு மீதியாகவுள்ள பிறப்பு, இறப்புப் பத்திரங்களை இன்று உரியவர்கள் கிளிநொச்சியில் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.


## வேலைவாய்ப்புக்கான நேர்முகத் தேர்வு

கிளிநொச்சி பிரதேசத்திலுள்ள மாவீரர், போராளி குடும்பங்களைச் சார்ந்தவர்களிடமிருந்து பின்வரும் பணிநிலைகளுக்கு பணியாளர்கள் தேவைப்படுவதால் இவர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 20, 21.03.2003 வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் காலை 10.00 மணி தொடக்கம் பகல் 2.00 மணி வரை கிளி/கனகபுரத்தில் அமைந்துள்ள மாவீரர், போராளிகள் குடும்ப நலன் காப்பக நடுவப்பணியகத்தில் இடம்பெறவுள்ளதால், தகுதியானவர்கள் தங்களிடம் உள்ள தகுதிச் சான்றிதழ்களுடன் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**பணிநிலைகள்:-**

- □ கணக்காளர்கள்
- □ காவலாளிகள்
- □ சாரதிகள்
- □ சிற்றூழியர்கள்
- □ வாகன நடத்துநர்கள்
- □ சமையலாளர்கள்
- □ நாடகக் கலைஞர்கள்
- □ தட்டச்சாளர்கள் - தமிழ், ஆங்கிலம்

அத்தோடு கணக்கியல், லேத் வெல்டிங் போன்றவற்றை பயில விரும்புபவர்களுக்கும், நேர்முகத் தேர்வு இடம்பெறவுள்ளதால் மேற்குறிப்பிட்ட திகதிகளில் சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். (ஆண்கள் மட்டும்)

□ கணக்கியல் (கல்வித்தகைமை) க.பொ.த.( சா/தரம் )இவர்களுக்கு உணவு, தங்குமிட வசதி உட்பட பயிற்சிக் காலத்திற்கான கொடுப்பனவும் வழங்கப்படும்.

□ லேத் வெல்டிங் (கல்வித்தகைமை) 10ஆம் ஆண்டு. இவர்களுக்கு உணவு, தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்

தொழில் வங்கி,
மாவீரர், போராளி குடும்பநலன் காப்பகம்,
கனகபுரம், கிளிநொச்சி.

(3028)



**சிந்தனைக்கு**

சொல்லுக்கு முன்னே எப்போதும் செயல் இருக்க வேண்டும். செயலால்தான் நாங்கள் செல்வாக்குப்பெற்றோம். செயல்தான் நமது நடவடிக்கைகளுக்கு அரசியல் வடிவம் தருகின்றது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.


ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 20-03-2003


# வலுவற்ற விளக்கம்

உயர் பாதுகாப்பு வலயத்திலும், அதற்கு வெளியேயும் பொதுமக்களின் வீடுகளில் நிலைகொண்டுள்ள படையினரை உடனடியாக வெளியேற்றுவதற்கு நிதி ஒதுக்கீடு இல்லையென சிறிலங்கா பேச்சுவார்த்தைக் குழுவினர் தெரிவித்துள்ளமையானது ஒருவகையில் கேலிக்கிடமானதாகவும் மறுபுறத்தில், சமாதான முயற்சிகளில் அவர்கள் காட்டும் அக்கறையின்மையையுமே வெளிக்காட்டுவதாகவுள்ளது.

சமாதான முயற்சிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சிற்கான நிதி ஒதுக்கீட்டில் பெரியதொரு மாற்றம் எதுவும் நிகழவில்லை. சில நூறு கோடி ரூபாக்கள் மட்டுமே வெட்டுச் செய்யப்பட்டது. சிறிலங்காவின் பொருளாதாரம் பெரும் சவால்களைச் சந்தித்துள்ளபோதும் பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் பெரும் வெட்டுச் செய்ய அரசாங்கம் தயாராக இல்லை.

யுத்தம் தீவிரமாக இருந்த காலகட்டத்தில் இராணுவச் செலவீடு /யுத்தச் செலவீட்டின் அதிகரிப்பானது சில ஆண்டுகள் ஆயிரம் கோடி ரூபாக்களுக்கும் மேலாகக்கூட இருந்ததுண்டு. வரவு-செலவுத் திட்டத்தில் இத்தகைய அதிகரிப்புக் கொண்டுவரப்பட்ட போதும் வருட இறுதியில், ஏன் வருடத்தின் மத்திய பகுதியில்கூட குறைநிரப்புப் பிரேரணைகளைப் பாராளுமன்றத்தில் அரசாங்கம் கொண்டுவந்ததோடு, பெரும் நிதி ஒதுக்கீட்டையும் ஏற்றுக்கொண்டுள்ளது. சில வருடங்களில் பாதுகாப்புத் துறைக்கென மூன்று குறைநிரப்புப் பிரேரணை கொண்டு வரப்பட்ட வரலாறு உண்டு.

ஆனால், தற்பொழுது நிதியொதுக்கீடு இல்லை என்ற அரசாங்கத்தரப்பின் கூற்றுக்கள் இராணுவத்தை இடம்மாற்ற அது விரும்பவில்லை என்பதனையே வெளிப்படுத்துவதாயுள்ளது. ஏனெனில், அரசாங்கம் தேவை ஏற்படின் நிதிவளத்தை ஏதோ ஒருவகையில் திரட்டிக்கொண்டுவிடும்.

சிறிலங்காப் பொருளாதாரம் பெரும் நெருக்கடிகளுக்கு நீண்டகாலமாக முகம் கொடுத்து வந்துள்ளது என்பது உண்மையே. அதிலும் சனாதிபதி சந்திரிகாவின் பொறுப்பற்ற நடவடிக்கைகள் காரணமாக - நாட்டின் நிதிவளம் அடித்தளத்தைத் தொட்டது என்பதும் நிராகரிக்கமுடியாததொன்றே. ஆனால், இந் நெருக்கடியின் மத்தியிலும், யுத்தம் நடந்தவேளையில், அதற்கான நிதி ஒதுக்கப்பட்டேவந்தது. யுத்தத்திற்கான ஒதுக்கீட்டில், அரசாங்கம் எந்தவிதமான குறைப்பையோ, வெட்டையோ செய்யவில்லை.

இது ஒருபுறமிருக்க, தற்பொழுது அரசு யுத்தத்தில் ஈடுபடாது இருந்தபோது ஆயுதப்படைக்கென ஒதுக்கீடு செய்துள்ள நிதியில் பல நவீன ஆயுத தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றன. சமாதானத்தின்மீது நம்பிக்கை கொண்டு ஆயுதப்படையை நவீனப்படுத்துவதையோ பயிற்சி அளிப்பதையோ சிறிலங்கா அரசு நிறுத்தவில்லை.

நிலைமை இவ்வாறானதாக இருக்கையில், இராணுவம், உயர் பாதுகாப்புவலயத்திலும், அதற்கு வெளியிலும் நிலைகொண்டுள்ள இடங்களில் இருந்து வெளியேறி வேறு இடங்களில் நிலைகொள்ள நிதி ஒதுக்கீடு இல்லை எனக்கூறுவது சிறுபிள்ளைத்தனமான நியாயமாகும். அதாவது இது ஏற்றுக்கொள்ளத்தக்க நியாயபூர்வமானதொன்றாக இல்லை.

சிறிலங்கா அரசாங்கம் உண்மையிலேயே சமாதான நடவடிக்கைகளில் உளப்பூர்வமாக ஈடுபடுவதாக இருப்பின் இராணுவம் இடம்மாறி நிலைகொள்வதற்கான நிதியை ஒதுக்கீடு செய்வது கடினம் மிக்கதாக இருக்கமுடியாது. இதனைச் செய்வதற்கு அரசாங்கத்திடம் பல வழிவகைகள் உண்டு. இவ்வாண்டிற்கான வரவு- செலவுத் திட்டம் தயாரிக்கும்போது இதற்கான ஒதுக்கீடு பற்றிய தேவை எழவில்லை. ஆயினும், ஏற்கனவே, ஒதுக்கீடு செய்யப்பட்ட பாதுகாப்புச் செலவினத்தில் இருந்து ஒரு பகுதியைத் திசை திருப்பிவிடலாம் அன்றி குறைநிரப்புப் பிரேரணை மூலம் நிதி ஒதுக்கீடு ஒன்றைச் செய்யலாம்.

ஆனால், இவ்வழிமுறைகளைப் பற்றிச் சிந்திக்காது நிதி ஒதுக்கீடு இல்லை எனக் கூறுவது இராணுவத்தின் இடமாற்றத்தை தாமதிப்பதற்கான காரணம் தேடுவதாகவே இருக்கும். சிறிலங்கா அரசாங்கத்தின் பேச்சின்படி பார்த்தால் இராணுவம் வெளியேற அடுத்த வரவு- செலவுத் திட்டம் வரையில் அல்லவா பார்த்திருத்தல் வேண்டி இருக்கும்.

ஆகையினால், இத்தகைய நொண்டிச் சாட்டுக்கள் கூறுவதை அரசாங்கம் தவிர்த்துக்கொண்டு கருமமாற்றுவதே சமாதான முயற்சிகளை முன்னெடுக்க உதவக்கூடும். ஏற்கனவே உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான விடயத்தை ஜெனரல் நம்பியாரிடம் ஒப்படைத்ததன் காரணமாக அரசாங்கம் அவ்விவகாரத்தை இழுத்தடிப்புச் செய்துள்ளது. இதேபோன்று நிதி ஒதுக்கீட்டை காரணம்காட்டி மேலும் இழுத்தடிப்பிற்கு அரசாங்கம் முற்படுமானால் அது சமாதான முயற்சிகளுக்கு அரசாங்கம் தோற்றுவிக்கும் இடையூறுகளாகவே இருக்கமுடியும்.

# ஏ-9 வீதியில் மூன்று விபத்துக்கள்

# ஒருவர் பரிதாப மரணம்; மூவர் காயம்!

யாழ் - கண்டி வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மூன்று விபத்துக்களில் ஒருவர் பலியானார், மூவர் காயமடைந்தனர். மாலை 5 மணியளவில் பரந்தன் சந்திப்பகுதியில் நகர்ந்து கொண்டிருந்த லொறி ஒன்றில் ஏற முயன்ற பாதசாரி ஒருவர் தவறி வீழ்ந்து மரணமானார்.

இவர் லொறியிலிருந்து தவறி வீழ்ந்த போது அதன் பின் சக்கரம் இவர் மீது ஏறியதால் அவர் அவ்விடத்திலேயே மரணமானார்.

திருவையாறைச் சேர்ந்த பாலுக்குட்டி (வயது - 40) என்பவரே மரணமடைந்தவராவார்.

கிளிநொச்சி நகரில் ஏ-9 வீதியில் உழவு இயந்திரம் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமுற்ற நிலையில் அக்கராயன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளி. மருதநகரைச் சேர்ந்த இராமன் சுப்பையா (வயது - 53) என்பவரே நேற்று முன்தினம் மேற்படி விபத்தில் காயமடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, முறிகண்டி தேவாலயப்பகுதியில் பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் தாயும் மகளும் காயமடைந்தனர். கணவன், மனைவி இரு குழந்தைகளுடன் உந்துருளியில் வந்து கொண்டிருந்த வேளை பேருந்து ஒன்றுடன் விபத்துக்குள்ளாகியதில் உந்துருளியைச் செலுத்தி வந்தவரின் மனைவி குணசேகரம் சுகிர்தா (வயது-21) தலையில் படுகாயமடைந்தார். மகள் குணசேகரம் துளசிகா (வயது - 3) என்ற சிறுமியும் காயமடைந்தார். இவர்கள் யாழ் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்கள் கிளி. சாந்தபுரம் பகுதியைச் சேர்ந்தவர்களாவர். (சோ)

# நடமாடும் மருத்துவ சேவையில் மேலதிக சிகிச்சை பெறலாம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மத்தியகல்லூரியில் எதிர்வரும் 4ஆம், 5ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள "மக்கள் சுகாதாரம்" நடமாடும் மருத்துவ சிகிச்சை தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் கிளிநொச்சி அரச செயலகத்தில் கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி நடைபெறவுள்ள நடமாடும் மருத்துவ சிகிச்சையினை இலகுபடுத்தும் வகையில் இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக கிளி.மாவட்டத்திலுள்ள மேலதிக சிகிச்சை பெற வேண்டியுள்ள நோயாளர்கள் தங்கள் வதிவிடங்களுக்கு அருகாமையிலுள்ள வைத்திய அதிகாரியின் சிபார்சுக் கடிதத்தினைப்பெற்று எதிர்வரும் 4ஆம், 5ஆம் திகதிகளில் நடைபெறும் நடமாடும் மருத்துவ சிகிச்சை நிலையத்துக்கு சமுகமளிக்கும் வண்ணம் கிளி.மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி வேண்டுகை விடுத்துள்ளார். (சோ)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முரணான கடற்படையின் செயற்பாட்டை தடுக்குக

## - கண்காணிப்புக் குழுவிற்கு முறைப்பாடு

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு ஒருவருடம் பூர்த்தியடைந்தநிலையிலும் கூட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முரணாக இலங்கை கடற்படையினர் செயற்பட்டு வருகின்றனரென யாழ். தீவக மக்கள் நலன் காப்பகம், பொது அமைப்புகள், மற்றும் அரச ஊழியர்கள். இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளனர்.

அல்லைப்பிட்டிப் பகுதியில் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முரணாக அமைக்கப்பட்டிருக்கும் கடற்படையினரின் சோதனைச் சாவடியை அகற்றி அப்பகுதியூடாகப் பிரயாணம் செய்யும் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை நீக்கவேண்டும்.

வேலணையில் இருந்து ஊர்காவற்றுறைக்குச் செல்லும் பிரதானவீதியில் அமைந்துள்ள கடற்படைமுகாமை அகற்றி வேலணை மத்திய கல்லூரியின் சுதந்திரமான கல்விச் செயற்பாடுகளுக்கு உதவ வேண்டும்.

கடலில் கடற்தொழிலாளர்கள் மீது கடற்படையினர் மேற்கொள்ளும் அடக்குமுறைகளை நீக்குதல் வேண்டும் எனத் தீவக மக்கள் நலன் காப்பகம், தீவகப் பொது அமைப்புகள், தீவக அரச ஊழியர்கள் சார்பில் இக் கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# கல்விச் சீர்திருத்தத் திட்டங்களுக்கு மாகாண சபைகள் ஒத்துழைக்க மறுப்பு

## கல்வியமைச்சர் சனாதிபதிக்கு அவசர கடிதம்

சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆலோசனையின் பேரில் தற்போது அமுல் செய்யப்படும் கல்விச் சீர்திருத்தத்திட்டங்களுக்கு மாகாண சபைகள் ஒத்துழைப்புத்தர மறுப்பதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு குற்றம் சுமத்தியுள்ளார்.

மாகாணசபைகளின் இந்த அசமந்தப் போக்குக் குறித்து உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் என்றும், அனைத்து மாகாண சபைகளைச் சேர்ந்த முதலமைச்சர்களுடன் சனாதிபதி இவ்விடயம் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் கோரி அமைச்சர் சனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

மாகாண சபைகளின் தூரநோக்குச் செயற்பாடுகள் காரணமாக. மாகாண சபையின் நிர்வாகத்திறகுட்படும் பாடசாலைகளின் முகாமைத்துவம் சீர்கெட்டுள்ளது.

சரியான முறையில் ஆசிரியர்களைப் பகிர்ந்துகொள்ளாமையால் பாடசாலைகள் பல சிக்கல்களை எதிர்நோக்குகின்றன. ஆசிரியர்கள் பற்றாக்குறை அதிகளவிலுள்ள ஊவா மாகாணத்திற்கு 800 ஆசிரியர்களை கல்வி அமைச்சு அனுப்பிய போதிலும் அந்த ஆசிரியர்களைப் பொறுப்பேற்க ஊவா மாகாண சபை மறுத்துவிட்டது என்று கல்வி அமைச்சர் அக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# வெடிபொருட்கள் அச்சுறுத்தலால் மீளக்குடியமர அச்சம்

(அலுவலக செய்தியாளர்)

பரந்தன் குமரபுரம் ஒன்பதாம் ஒழுங்கை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட பாரிய மண்அரணும் மிதிவெடி கண்ணிவெடிகளும் அகற்றப்படாது உள்ளமையின் காரணத்தினால் குமரபுரம் ஒன்பதாம் ஒழுங்கையில் முன்பு வசித்துவந்த மக்கள் மீளவும் தங்கள் சொந்தக் காணிகளில் மீளக்குடியமர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதென கவலை தெரிவித்துள்ளனர்.

இப்பகுதிகளில் வசித்துவந்த மக்கள் சத்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாகப் புலம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியிருந்து தற்போது சுமுகநிலை ஏற்பட்டுள்ள நிலையிலும் இக் காரணங்களினால் மீண்டும் சொந்த இடத்திற்குக் காலடியெடுத்து வைக்க முடியவில்லையே என கவலையடைந்துள்ளனர். (சோ)

# அன்னை பூபதியின் 15ஆவது நினைவு நிகழ்வு உணர்வெழுச்சியுடன் நேற்று ஆரம்பம்




(அலுவலக செய்தியாளர்)

தியாகி அன்னை பூபதியின் 15ஆம் ஆண்டு நினைவு முதலாம் நாள் நிகழ்வு நேற்று வன்னிப் பெருநிலப் பரப்பெங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப் பட்டது.

அரச, அரசசார்பற்ற தனியார் நிறுவனங்கள், அரசியல்துறை நிர்வாகச் செயலகங்கள், காவல் பணிமனைகள், பாடசாலைகள் ஆகியவற்றில் நேற்றுக் காலை 9.00 மணிக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு தேசியக் கொடியேற்றி தியாகி அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கு சுடரேற்றி மலர்மாலை அணிவித்து மலர் தூவி நினைவஞ்சலி செய்யப் பெற்றதுடன் நினைவுரைகளும் இடம்பெற்றன.

கிளிநொச்சி . சீர்திருத்தப் பள்ளியில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட பந்தலில் தியாகி அன்னை பூபதி அவர்களின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு சீர்திருத்தப் பள்ளிப் பொறுப்பாளர் நரேன் தலைமையில் நினைவு நிகழ்வுகள் இடம் பெற்றன.

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் வட்டக்கச்சி பிரதேச மாவீரர் மண்டபத்தில் வட்டக்கச்சி பிரதேச தமிழர் ஏழுச்சிப் பேரவைச் செயலர் பொன்னுத்துரை தலைமையில் நினைவு நிகழ்வு இடம்பெற்றது.

திருமுறிகண்டியில் மேற்படி நினைவு நிகழ்வு ராசா தலைமையில் இடம்பெற்றது.

தியாகதீபம் அன்னை பூபதியின் 15ஆம் ஆண்டு நினைவு நாள் எழுச்சி நிகழ்வின் ஆரம்பநாள் நிகழ்வுகள் நேற்று மூங்கிலாறு உடையார்கட்டில் அமைந்துள்ள மட்டு - அம்பாறை மாவீரர் நினைவு மண்டபத்தில் மிகவும் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.

மட்டு - அம்பாறை தொடர்பகப் பொறுப்பாளர் ஐங்கரன் தலைமையில் காலை 09.00 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் பொது ஈகச்சுடரினை ஜெயந்தன் படையணி நிதிப் பொறுப்பாளர் தனுராஜ் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக் கொடியினை ஜெயந்தன் படையணி நிர்வாகப்பொறுப்பாளர் எழுநிலவன் அவர்கள் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து அன்னை பூபதி அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாவீரர் உருத்தி அவர்களின் தாயார் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார். பின்னர் தலைமையுரையை அடுத்து ஜெயந்தன் படையணி போராளி இராசு அவர்களின் நினைவுரையின் பின்னர் மக்களும் போராளிகளும் மலர் வணக்கம் செலுத்தினர்.

வலயப்பொறுப்பாளர் தலைமையில் தியாக தீபம் அன்னை பூபதியின் 15ஆம் ஆண்டின் முதல் நாள் நிகழ்வுகள் நேற்று பூநகரி பிரதேச அரசியல்துறைச் செயலகத்தில் மிகவும் எழுச்சியாக ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் பொதுச்சுடரினை பூநகரிப் பிரதேச கணக்காளர் கி.கிருஷ்ணகீதா ஏற்றினார். தேசியக் கொடியினை பூநகரிபிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் த.நிருபன் ஏற்றினார். உருவப்படத்திற்கான ஈகச்சுடரைத் தீபன் ஏற்றினார். உருவப் படத்திற்கான மலர் மாலையினை பூநகரி பிரதேச கல்விச்சேவை இணைப்பாளர் அணிவித்தார். தொடர்ந்து மலர் வணக்கம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர். (சோ.12)

# மட்டக்களப்பு கல்லடியில் அன்னை பூபதியின் சிலை திறப்பு

மட்டக்களப்பு - கல்லடியில் தியாக தீபம் அன்னை பூபதியின் சிலை ஒன்று நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

புளியந்தீவு கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சேனாதி ராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நினைவுரைகளை மட்டு. அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ் மட்டு. அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல் துறைபொறுப் பாளர் பானுகாவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக் களப்பு மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜ சிங்கமும் நிகழ்த்தினர்.

# பேச்சில் காணப்படும் முன்னேற்றமே வெளிநாட்டு உதவியைத் தீர்மானிக்கும்

## - ஜப்பானின் விசேட தூதுவர் தெரிவிப்பு

(டோக்கியோ)

பேச்சுவார்த்தையில் கணிசமான முன்னேற்றம் காணப்படும் பட்சத்தில் மட்டுமே நிதி உதவிகள் வழங்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு என ஜப்பானின் விசேட தூதுவர் யசுகி அகாஷி நேற்று சிறிலங்கா அரசிற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஜப்பானில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தையின் இரண்டாவது அமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டார்.

இக்கருத்துரையில் பேச்சுவார்த்தையில் கணிசமான முன்னேற்றம் காணப்பட வேண்டும் அரசியல் தீர்வு குறித்து முன்னேற்றகரமான கருத்துப் பரிமாற்றம் இடம் பெறுவதை உறுதிப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது என்றும் ஜப்பானிய விசேட தூதுவர் சுட்டிக்காட்டி யுள்ளார். அவ்வாறு உறுதிப்படுத் தினால் மட்டுமே நிதி உதவி வழங்கப்படும் எனவும் வெற்றுக் காசோலைகளை வழங்க முடியாது என்றும் அவர் இந்த அமர்வில் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் உதவி வழங்கும் ஏனைய நாடுகளின் கருத்துக்களையும் நோர்வேப் பிரதிநிதிகள் விரிவாக எடுத்துரைத்துள்ளனர்.

### சிரான்....

வீதிகள், கட்டுமானங்கள் எல்லாம் தரைமட்டமாகக் கிடக்கிறது. இதில் வீதிப் போக்குவரத்தையாவது சீர்ப்படுத்துமாறு அறிக்கையில் வலியுறுத்திக் கேட்கப்பட்டுள்ளது.

வீதி அமைப்பையும், கட்டுமான வேலைகளையும் ஆரம்பிக்க வேண்டும். இவற்றில் சிரானின் செயற்பாட்டு வேகம் குறைந்துள்ளது என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேலும் சிரானின் நிர்வாகக் கட்டமைப்பு பலப்படுத்தப்பட்டு அதற்கு கூடுதல் அதிகாரமும் பணமும் வழங்கப்படவேண்டும். வெளிநாடுகளிலிருந்து நிதி இன்னும் அங்கு வந்து சேரவில்லை. உலக வங்கியின் நிர்வாகச் சிக்கல்கள் காரணமாக நிதி வந்து சேர்வதில் தாமதமாக இருக்கின்றது என்பவற்றுடன் பல விடயங்கள் எடுத்து விளக்கப் பட்டுள்ளன.

இறுதியாக அரசாங்கம் முயற்சிகள் எடுக்க வேண்டும் இல்லாவிட்டால் இந்தப் பேச்சு வார்த்தைகளில் அர்த்தமே இல்லை என்றும் அந்த அறிக்கை யில் கூறப்பட்டுள்ளது.

### மனித....

உரிமை சம்பந்தப்பட்ட பிரச்சினை பற்றியும் நாங்கள் பேசினோம். அத்தோடு புதிதாக ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் மற்றும் ஐ.நா. நியமங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சில பொதுவான அடிப்படை மனித உரிமைகள் அடங்கிய ஒரு பிரகடனத்தை இருதரப்பும் செய்யவேண்டும் என நாங்கள் முடிவெடுத்திருக்கின்றோம். இதைப்பற்றி விரிவாக ஆராய்ந்து திரு. இயன்மார்ட்டின் அவர்களுடனும், சிறிலங்கா அரசுடனும் பேசி அனேகமாக அடுத்த தாய்லாந்தில் நடைபெறும் பேச்சுவார்த்தையின் போது இந்த மனித உரிமைப் பிரகடனத்தை இரு தரப்பும் வெளியிடும்.

தனி மனித உரிமைகள் மட்டுமல்ல, எமது மக்களின் தேசியத்துடன் சம்பந்தப்பட்ட விடயமான சுயநிர்ணய உரிமையும் அந்த பிரகடனத்தில் நிச்சயமாக பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும். அது ஒரு முக்கியம். அந்த விடயம் இருக்கவேண்டுமென நாம் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறோம்.

இந்த மனித உரிமைகள் பிரகடனம் தொடர்பாக தொடர்ந்தும் விவாதங்கள் நடைபெறும். இயன் மாட்டின் அவர்களுடன் சேர்ந்து இந்தப் பிரகடனத்தை நாங்கள் தயாரித்து அடுத்த பேச்சுவார்த்தையின் போது பகிரங்கமாக அறிவிப்பதென முடிவெடுத்துள்ளோம்.

# யாழ். இல் வீடுகளில் இருந்து வெளியேற புதிய தளங்கள் அமைக்கப்பட வேண்டுமாம்!

## - ராணுவத் தளபதி பலகல்ல கூறுகிறார்

(கொழும்பு)

உயர்பாதுகாப்பு வலயத்திற்கு வெளியிலுள்ள பொதுமக்களின் வீடுகளை விட்டு இராணுவம் வெளியேறுவதானால் பயன்படாது காணப்படும் காணிகளில் புதிய தளங்கள் பலவற்றை அமைப்பதற்கான திட்டம் ஒன்றினை சிறிலங்கா இராணுவத் தளபதி லெப்.கேணல் லயனல் பலகல்ல விடுத்துள்ளார்.

அவர் தனது அறிக்கையில்: உயர்பாதுகாப்பு வலயத்திற்கு வெளியிலுள்ள பொதுமக்களின் வீடுகளிலிருந்து படையினரை விலக்கிக் கொள்வதாக இருந்தால் மேலும் பல தளங்களை வெளியே அமைக்க வேண்டும். இதற்குப் பயன்படாமல் சும்மா கிடைக்கும் காணிகளில் இந்த முகாங்களை அமைக்க வேண்டும். அதில் படையினரை நிலைகொள்ள வைத்து படிப்படியாக பொது மக்களின் வீடுகளைக் கொடுக்க முடியும் என்று அந்த அறிக்கையில் யோசனை தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த யோசனையைப் புலிகள் அனுமதிப்பார்களா? என்ற கேள்வியையும் பலகல்ல தனது அறிக்கையில் எழுப்பியுள்ளார்.

# பலகல்லவின் புதிய தளங்கள் அமைக்கும் திட்டம் விடுதலைப்புலிகளால் நிராகரிப்பு

உயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே பயன்படுத்தப்படாத காணிகளில் புதிய முகாங்களை அமைத்து அதில் படையினரை நிலைகொள்ளச்செய்வதன் மூலம் உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே படையினர் நிலை கொண்டுள்ள பொதுமக்களின் வீடுகளை பொது மக்களுக்கு வழங்க சிறிலங்கா இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்திருந்த யோசனை தமிழீழ விடுதலைப் புலிகளால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஜப்பானில் வைத்து புலிகள் இந்த நிராகரிப்பு அறிவித்தலை வெளியிட்டுள்ளனர்.

பயனற்றுக்கிடக்கும் காணிகளும் எமது மக்களுக்குச் சொந்தமான காணிகளாகும். ஆகவே வீடுகளிலிருந்து அருகிலுள்ள காணிகளுக்கு வருவதில் அர்த்தமில்லை. அதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம். எமது மக்களும் அனுமதிக்கமாட்டார்கள். யாழ்ப்பாண மக்களைப் பொறுத்த வரையில் நிலமும், கல்வியும் தான் முக்கியம். ஆகவே ஏற்கனவே ஆக்கிரமித்துள்ள உயர்பாதுகாப்பு வலயங்களிலிருந்து வெளியேறுவதற்குத் தயங்கிக்கொண்டிருந்த காரணத்தினால்த்தான் உயர் பாதுகாப்பு வலயத்திற்கு அப்பாலுள்ள பிரதேசங்களிலிருந்து படையினரை விலக்கிக்கொள்ளுமாறு நாம் கேட்டிருந்தோம். அதற்கு அவர்கள் இணக்கம் தெரிவித்திருந்தபோதும் இப்படியான திட்டத்தை முன்வைத்துள்ளார்கள். இதை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் ஏனென்றால் அவை எமது மக்களின் காணிகள் இவை பயன்படாத காணியாக இருக்கலாம். வீடுகளற்ற வெறுங் காணியாக இருக்கலாம். வெளிநாடுகளில் அகதிகளாக வுள்ள எமது மக்களின் காணிகள் நிறைய இருக்கின்றன. அந்த மக்கள் திரும்பிவந்து அந்தக் காணிகளின் வீடு கட்டுவார்கள். எமது மக்கள் பயிர்ச்செய்கையை மேற்கொள்வார்கள். வெறும் காணியென்று யாழ்ப்பாணத்தில் ஒன்றும் இல்லை. ஆதலால் இந்த ஆலோசனையை நாம் அனுமதிக்க மாட்டோம் என அரசிற்கு சுருக்கமாக, சூடாக கூறியுள்ளோம் என விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

### ஜப்பான்...

கொண்டதும் ஒரு சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாகவே நாங்கள் பார்க்கிறோம்.

உலகப் பொருளாதார வல்லரசு முதல் தடவையாக எம்முடன் சேர்ந்து சில வேலைத்திட்டங்களில் ஜப்பானிய அரசாங்கம் முதலீடு செய்யப் போகிற விபரங்களையும் அவர் தெரிவித்தார்.

ஆகவே வடக்கு - கிழக்கு மக்களின் எதிர்காலம், அந்த மக்களின் புனர்வாழ்வு புனர்நிர்மாணம் சம்பந்தப்பட்ட விடயங்களில் ஜப்பானிய அரசு நேரடியான பங்கைக் கொள்வது என்பது இவரது பிரசன்னத்திலிருந்து தெளிவாகியுள்ளது. இது இந்தப் பேச்சுவார்த்தைக்கு ஒரு சர்வதேச பரிமாணத்தைக் கொடுத்திருக்கிறது. ஆகவே அவர் இந்தப் பேச்சுக்களில் கலந்துகொண்டது ஒரு முக்கியமான விடயமாகும் எனவும் தெரிவித்தார்.

### மூழ்கடிக்க...

த.மு. நாச்சிக்குடா உட்புறம் முழங்காவில்.

05 ஏபிள் சீமன் இளம்பரிதி
கிருஷ்ணன் ஜெயந்தன்
நி.மு. அளவெட்டி யாழ்.
த.மு. பாட்டாளிபுரம் பாண்டியன் குளம், மல்லாவி.

06) போசன் நவநீதன் / சிந்து
செல்வரட்ணம் ஜெகன்
நி.மு. கொக்குவில், யாழ்.
த.மு. சிவஞானசுந்தரம் சிறுவர் பராமரிப்பு நிலையம் அருகாமை முழங்காவில்.

07) சீவ்ஒவிசர் இரும்பொறை
வேலாயுதம் கரன்
வண்ணார்பண்ணை, யாழ்.

08) 3rd ஒவிசர் மேகன்
இராமச்சந்திரன் ரவிச்சந்திரன்
பன்குடா, திருகோணமலை.
த.மு. கணேஸ் திட்டம், வள்ளிபுனம் முல்லைத்தீவு.

09) 2nd எஞ்சினியர் தணிகைமாறன்
தனேந்திரன்
துரைசிங்கம் கிருபன்
நி.மு. இளவாலை, யாழ்.
த.மு. பாரதிபுரம், நெட்பானா விசுவமடு.

10) 3rd எஞ்சினியர் அமுதன்
செல்வரத்தினம் ஜீவகரன்
மறவக்குறிச்சி, பூநகரி, மன்னார்.

11) கடேற் தூயவன்
பிரான்சிஸ் சந்திரா சர்வானந்தன்
நி.மு. 39/02, திருவையாறு கிளிநொச்சி.
த.மு. 4/6, திருநகர், மல்லாவி.

இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைச் செலுத்தியுள்ளனர்.

### யாழ்...

காரி சதீஸ் நம்பியார் அறிக்கை சமர்ப்பித்ததன் பின்னர் இது தொடர்பாக பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வடக்கில் அரசாங்கத்திற்கும் சொந்தமான காணிகளை இடம்பெயர்ந்தவர்களுக்கு சட்டரீதியாகப் பெற்றுக் கொடுக்கும் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப் படும் என்று அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



2nd ஓவிசர்
சுடர்மன்னன்
முல்லை/கள்ளப்பாடு



சீவ்ஓவிசர்
இரும்பொறை
யாழ்/வண்ணார்பண்ணை



ஏபிள்சீமன்
எழில்கண்ணன்
யாழ்/நீர்வேலி



சீவ்எஞ்சினியர்
அம்பிகைவாணன்
யாழ்/சித்தங்கேணி



கப்டன் (கப்பல்)
சிலம்பரசன்/றஞ்சன்
யாழ்/ஆழியவளை



3rd ஓவிசர்
மேகன்
திருமலை/பன்குளம்



3rd எஞ்சினியர்
அமுதன்
கிளி/மட்டுவில்நாடு

10. 03. 2003 அன்று சர்வதேசக் கடற்பரப்பில் சிறிலங்காவின் கடற்படை
விடுதலைப்புலிகளின் வணிகக்கப்பலைத்
தாக்கியழித்தபோது வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைந்து...

தீரம் மிகுந்த கொள்கையை வளர்க்க
திரை கடல் ஓடித் திரவியம் சேர்த்தோர்
ஈரம தில்லா நெஞ்சத் தவறால்
இடை நடுக்கடலில் இல்லாதொழிந்தனர்
வீரக் கரங்களும் விம்மிய நெஞ்சும்
வங்கக்கடலில் காவிய மாகின
சூரப் புலிகளே! பதினொரு பேரும்
சாரமாம் எங்கள் விடியலின் போரில்...
தூங்கா திருக்கும் நெஞ்சங்க ளிங்கே
தொடரும் உம்பணிகள் சுவடுகள் தொட்டு.



கடேற்
தூயவன்
கிளி/திருவையாறு



2nd எஞ்சினியர்
தணிகைமாறன்/தனேந்திரன்
யாழ்/மாரீசன்கூடல்



ஏபிள்சீமன்
இளம்பரிதி
யாழ்/அளவெட்டி



போசன்
நவநீதன்/சிந்து
யாழ்/கொக்குவில்

# இவர்களுக்கு
# எமது வீரவணக்கங்கள்

அரசியல்துறை, தமிழீழ விடுதலைப்புலிகள்,
தமிழீழம்.